வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4177 /ஆ4/2024 நாள்: 14.02.2025

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் – தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வு (NMMS) பிப்ரவரி –2025 – 22.02.2025 அன்று நடைபெறவுள்ள தேர்விற்கு –தேர்வுமைய பெயர்பட்டியல் மற்றும் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகள் பதிவிறக்கம் செய்தல் –சார்பு

பார்வை : அரசு தேர்வுகள் இணை இயக்குநரின் ( மேல்நிலை ) செயல்முறைகள் ந.க.எண்.018922/ டி(3)/2024 நாள் 14.02.2025

===============

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இணை இயக்குநரின் (மேல்நிலை) கடிதங்களுக்கிணங்க 22.02.2025 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்விற்கு வருகைபுரியும் மாணவர்களின் பெயர்பட்டியலுடன் கூடிய வருகைத் தாட்கள் (Nominal Roll Cum Attendance Sheets) தேர்வு மைய பள்ளித் தலைமையாசிரியர்கள் தேர்வு மையம் வாரியாக www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் 17.02.2025 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>தேர்வுகூட நுழைவுச்சீட்டு:</u>

மேற்படி தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை (Hall Tickets) 17.02.2025 பிற்பகல் முதல் பள்ளித் தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தங்கள் பள்ளிக்கான User ID /Password –ஐ கொண்டு பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்கவும். தேர்வு மைய விவரத்தினை மாணவர்களுக்கு தெரிவிக்கவும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தேர்வுகூட நுழைவுச் சீட்டினை அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களும் பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதை மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தொடக்கக்கல்வி) உறுதி செய்து அவ்விவரத்தினை 19.02.2025 க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>மிக முக்கியம்:</u>

தேர்வர்களின் நுழைவுச் சீட்டுகளில் பெயர் / பிறந்த தேதி / வகுப்பினம் (Community) ஆகியவற்றில் திருத்தம் ஏதும் இருப்பின், திருத்தத்தினை சிவப்பு நிற மையினால் சுழித்து சரியான பதிவினைக் குறிப்பிட்டு, பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சான்றொப்பம் இட வேண்டும். புகைப்படம் மாறியிருந்தால், தேர்வுக்கூட நுழைவுச் சீட்டில் தேர்வரின் சரியான புகைப்படத்தினை ஒட்டி பள்ளி தலைமை ஆசிரியர்கள் சான்றொப்பம் இடவேண்டும். மற்றொரு புகைப்படத்தை பெயர்ப்பட்டியலில் ஒட்டுவதற்காக தேர்வு மையக் கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

தேர்வு மையக் கண்காணிப்பாளர்கள் இத்தகைய தேர்வரின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை பெயர்ப்பட்டியலிலும் தவறாது மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:

- தேர்வு மைய பள்ளித்தலைமை ஆசிரியர்கள்,வே.மா.
- அனைத்து அரசு பள்ளிகள்,அரசு உதவி பெறும் பள்ளிகள் /மாநகராட்சி/நகராட்சி /ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ,வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தொடக்கக்கல்வி )அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள்) அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு